**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 379/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | மலர்விழி |
| Father's /Husband Name | : | ராஜசேகர் |
| Village | : | சீதக்கமங்களம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 35 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 06th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் சீதக்கமங்களம் உக்கடையில் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது அக்காவின் கணவர். எனது அக்காவும் எதிரியும் திருமணம் ஆனதில் இருந்து சுமார் 10 வருடகாலம் பிரிந்து வாழ்கிறார்கள். உக்கடையில் உள்ள என் அக்கா வீட்டில் என் அக்கா மேல் மாடியிலும் நான் கீழ் வீட்டிலும் வசித்து வருகிறோம். ஆஜர் எதிரி சம்பவத்தின் போது உக்கடையில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்தார். கடந்த 04.11.2018 காலை 09.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். அப்போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டு இரும்பு கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தார். நான் ஏன் கதவை திறந்து கொண்டு உள்ளே வருகிறீர் என்று கேட்டேன். அப்போது என்னை ஆஜர் எதிரி நீஎன்னை என்ன கேட்பது என்று கூறி குச்சிகாரி மவளே தேவுடியா மவளே என தகாத வார்த்தையால் திட்டி அருகில் கிடந்த கம்பை எடுத்து எனது இடது புருவத்தின் மேல் அடித்து விட்டார் (**சாட்சி தனது காய தழும்பை காட்டி இன்றும் குழியாகதான் உள்ளது என்று சாட்சி சொல்கிறார்**) மேற்படி எனது அக்கா உஷா சத்தம் கேட்டு கீழே வந்து விட்டார். மேற்படி சம்பவத்தின் போது எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த கலியமூர்த்தி மற்றும் செந்தில்குமார் ஆகியோர் வந்தார்கள். அவர்களை கண்டதும் ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடி விட்டார். பின்பு எனது அப்பா என்னை நன்னிலம் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். மேற்படி மருத்துமனையில் இருந்த என்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு என்னை அழைத்து சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்.

(அரசு தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி அரசு தரப்பு கேட்டுக் கொண்டதால் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.06 16:31:29 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.